singaporeartmuseum
CONTEMPORARY ART IN SOUTHEAST ASIA

# Ming Wong
# **Wayang Spaceship**

**மிங் வோங்**
***வயாங் விண்கலம்***
2022
அமைப்பு: கடல் மரங்கள் (Dipterocarpaceae மற்றும் Neobalanocarpus heimii வகை), பாலியெதிலின் பிரம்பு, பாலியெதிலின் வரைதுணிப்பரப்பு (கேன்வாஸ்) மற்றும் கயிறுகள், அலுமினியம் பூசப்பட்ட தாள், ஒளிரும் குழாய் விளக்குகள், வெள்ளி எதிரொளிப்பு மற்றும் ஒளிக் கட்டுப்பாட்டு பாலியஸ்டர் மெல்லிழை, துருப்பிடிக்காத எஃகு, அலுமினியம், அக்ரிலிக், ஒட்டு பலகை மற்றும் கான்கிரீட்; காணொளி மற்றும் கேட்டொலி: ஒற்றை ஒளிவழிக் காணொளித் திரையிடல், 4:3 வடிவம், கூடுதல் மெகாஃபோன் ஒலிப்பெருக்கிகள் மற்றும் மாற்றியமைக்கப்பட்ட வானொலி ஒலிநாடா இயக்கியைக் கொண்ட பல ஒலிவழிக் கேட்டொலி.

ஒரு வயாங் விண்கலம் நமது கரையில் தரையிறங்கியுள்ளது. காலங்காலமாக நிகழ்ந்த தொழில்துறை, தொழில்நுட்ப மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த நெருக்கடிகளுடன் சேர்ந்து, இதுவும் பிரபஞ்சத்தில் நம் இடத்திற்குச் சாட்சியாக நிற்கிறது. பகலில், வயாங் விண்கலம் செயலற்ற நிலையில் உள்ளது, அதன் எதிரொளிக்கும் மேற்பரப்புகள் கொள்கலன்-துறைமுகத்தைச் சுற்றியுள்ள சலசலப்பான போக்குவரத்தை எதிரொளிக்கிறது. வேறொரு பரிமாணத்திலிருந்து தவறாக ஒலிபரப்பப்படும் வானொலி ஒலிபரப்பினால் அதன் சொந்த செயலற்ற தன்மை எப்போதாவது குறுக்கிடப்படுகிறது.

அந்தி வேளையில், வயாங் விண்கலம் ஒரு பயணிக்கும் சீன அரங்கமாக அதன் முந்தைய பாத்திரத்தை மீட்டெடுக்கிறது, கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தை ஒளி, ஒலி மற்றும் உருவம் அடங்கிய ஓர் ஒத்திசைவு இயக்கம் மூலம் ஒளிரச் செய்கிறது, அது ஓர் அறிஞர்-போராளியின் நினைவிலிருந்து நேரலையில் ஒளிபரப்பப்பட்டது போல அமைகிறது. கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்திற்கு இடையே சுதந்திரமாக நேரப்பயணம் மேள்கொள்வது போன்ற உணர்வு அது. ஒவ்வொரு நாளும், சிங்கப்பூர் கலை அரும்பொருளகம் மூடப்பட்ட பிறகு, வயாங் விண்கலம் ஒளி, ஒலி மற்றும் திரைப்படத்துடன் செயல்படுத்தப்படுகிறது, இது பாரம்பரிய சீன இசைநாடகக்கலையின் தனியோர் அடையாளத்துடன் பொதுமக்களைத் தொடர்பு கொள்ள அனுமதிக்கிறது.